
# வேர்களின் குரல்

எங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான குரல்

தை - திருவள்ளுவர் ஆண்டு 2040 (சனவரி - 2009) மலர் -1 இதழ் - 1



# வாழ்த்துகிறோம்



மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பின் தலைமைத்துவ பயிற்சி முகாம், மே-2008, கரூர்.

மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பின் முதல் முயற்சியாகிய வேர்களின் குரல் எனும் இந்த இதழை வெளிக்கொணர்ந்திருக்கும் குழந்தைகளே, சமூக நிகழ்வுகளை, குழந்தைகள் இயக்கச் செயல்பாடுகளை பரவலாக்குவதற்காக அச்சு ஊடகத்தில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருக்கும் உங்களை பாராட்டுகிறேன்.

சமூகத்தின் சம கால நிகழ்வுகளை தூவல் கொண்டு எழுத்துக்களாக்கி அதை தமது சக தோழர்களுடன் பகிர்ந்து கொள்ளும் தங்களின் போக்கு மிகுந்த நம்பிக்கை கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது.

வாழ்த்துக்களுடன்,
**சிரில் அலெக்சாண்டர்**
மேக்ட் இயக்குநர்

## வேர்களின் குரல்

குழந்தைகளின் உரிமைகளுக்கான ஏடு

இதழாசிரியர் :
ச. சுபத்ரா
ஆசிரியர் குழு :
க. துரைராஜ்
ப. கார்த்திகேயன்
ம. முத்துலெட்சுமி
பொ. பிரியங்கா
இரா. கல்பனா
செ. சரவணன்
ர. சத்யா
ம. பாபு
செ. தியாகராஜன்
ஆ. ஜெயபால்
த. கவியரசன்

மலர் 1

இதழ்1

தை - திருவள்ளுவர் ஆண்டு 2040
(சனவரி - 2009)

நன்கொடை ரூ.5.00

தொடர்புக்கு :
மேரி ஆனி சேரிட்டி ட்ரஸ்ட் ( மேக்ட் )
கதவு எண்.8,
பிளாட் எண். 39,
ஸ்டார்லிங் அப்பார்ட்மென்ட்,
அக்பராபாத் இரண்டாம் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 044 24721579


## ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த குழந்தைகளுக்கும், எங்கள் வளர்ச்சியில் தொடர்ந்து துணையாக இருந்து வரும் அனைவருக்கும் வணக்கம்.

நான் நினைக்கவில்லை இந்த இதழில் உங்களிடம் பேசுவேன் என்று, இதழ்கள் பெரும்பாலும் பெரியோர்களாலேயே வெளியிடப்படுகிறது. நாங்கள் பெரியோர்களின் வழிகாட்டுதலோடு முதல் முறையாக இந்த இதழை வெளியிடுகிறோம். இந்த இதழில் எங்கள் உரிமைகளை நிலைநாட்டிட நாங்கள் முயற்சித்துள்ளோம்.

நாங்கள் எங்கள் இதழுக்கு **'வேர்களின் குரல்'** என பெயரிட்டுள்ளோம். வேர்கள் எப்படி நீரை உறிஞ்சி பல பாகங்களுக்கு அளிப்பது போல நாங்கள் குழந்தைகளிடமிருந்து செய்திகளை பெற்று உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

இந்த இதழில் குழந்தைகளின் படைப்புகள், அவர்களின் சாதனைகள் எங்கள் இயக்க செயல்பாடுகள் கூட்டமைப்பு செயல்பாடுகள், குழந்தைகளின் உரிமைகள், மேக்ட் பற்றிய பார்வை ஆகியவைகளை இந்த இதழில் அறிமுகப்படுத்தியுள்ளோம். இனி வரும் இதழில் எங்களின் திறமைகளை படிப்படியாக உயர்த்தி வெளிக்கொணர்வோம்.

இந்த இதழ் வெளிவர துணையாக இருந்து ஊக்கப்படுத்திய அனைவருக்கும் எங்கள் ஆசிரியர் குழுவின் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த காலாண்டு இதழில் உங்களிடம் பேசுவோம்.


இதழாசிரியர்,
**ச. சுபத்ரா**
வயது 14, இராசாளிபட்டி,
மாவட்டத் தலைவர், புதுக்கோட்டை.

# மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் செயல்பாடுகள்

குழந்தைகள் இயக்க கூட்டம் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒவ்வொரு இயக்கத்திலும் நடைபெறுகிறது. குழந்தைகளின் திறமைகளை வெளிபடுத்தும் வகையில் இந்த கூட்டம் அமைந்துள்ளது. கூட்டம் நடைபெறும் முறை பின்வருமாறு எல்லா பகுதிகளிலும் சீராக நடைபெற்று வருகிறது.

**இயக்க கூட்டம் நடைபெறும் முறை**

1. அறிக்கை ஏட்டில் உறுப்பினர்கள் கையொப்பம்
2. இயக்கப்பாடல்
3. வரவேற்புரை
4. விவாத குறிப்பு
5. சென்ற வார கூட்ட அறிக்கை
6. சென்ற வார செயல் திட்டங்களின் மதிப்பீடு
7. பொருளாளர் அறிக்கை
8. குழு விளையாட்டுகள்
9. கலந்துரையாடல்
10. திட்டமிடல்
11. இன்றை நிகழ்வுகள் குறித்த கண்ணோட்டம்.
12. கலைப்பயிற்சி
13. நன்றியுரை போன்ற செயல்பாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன.

**ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்**

ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம் செயல்பாட்டின் மூலம் முதலில் காரடைக்கான்பட்டியில் நூறு மரங்கள் நட்டு முடிக்கப்பட்டன, மேலும் விரிவடைந்து பசுக்காரன்பட்டி, கவரப்பட்டி போன்ற கிராமங்களிலும் நடப்பட்டுள்ளன. இந்த ஊர்கள் மட்டுமன்றி குழந்தைகள் இயக்கம் உள்ள மற்ற இருபத்தேழு ஊர்களிலும் நடப்பட்டு வருகின்றன. இந்த மரக்கன்றுகளை குழந்தைகளே வளர்த்து வருகின்றனர். இந்த செயல்பாட்டிற்கு காரணம் சுற்றுச் சூழலை பாதுகாக்கவும், அதிக மழை பெறுவதற்காகவும் பசுமையான கிராமத்தை உருவாக்கவும் வேம்பு என்னும் மூலிகை மரம் தேர்ந்தெடுக்கப்பட்டு நடப்பட்டுள்ளன. இதன் நோக்கம் வருங்காலங்களில் பசுமையான இயற்கை சோலை நிறைந்த கிராமமாக மாற்றுவதும், இந்நாட்டிற்கு ஒரு முன்னுதாரணமாகவும் அமையும் என்ற நம்பிக்கையுடனும் இப்பணியை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

**பெற்றோர் கூட்டம்**

பெற்றோர் கூட்டம்

பெற்றோர் கூட்டத்தின் நோக்கம் குழந்தைகள் மட்டுமன்றி பெற்றோர்களும் மேக்ட் வோ்கள் குழந்தைகள் இயக்கத்தின் செயல்பாடுகள் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும், மேலும் குழந்தைகளின் உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்காவும் ஒவ்வொரு ஊரிலும் பெற்றோர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

**தலைமைத்துவ பயிற்சி**

ஆண்டிற்கு ஒருமுறை ஏப்ரல் அல்லது மே மாதத்தில் ஒவ்வொரு இயக்கத்திலும் தலைமைத்துவ பயிற்சி நடைபெறுகின்றன. இதில் ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்படும். இத்துடன் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களிலிருந்து முறையே,

**தலைவர்**
**துணைத்தலைவர்**
**செயலாளர்**
**இணைச் செயலாளர்**
**பொருளாளர்**

போன்ற பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அனைத்து இயக்கங்களிலும் தலைமைத்துவப் பயிற்சி நடத்தப்படுகின்றனர். இதன் மூலம் ஆளுமை பண்பு ஒவ்வொரு குழந்தைகளுக்குள்ளும் வளர்ப்பதற்காக, இப்பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றன.

**நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்களை அகற்றுதல்**

சுற்றுசூழலை பாதுகாக்கும் வகையிலும், நெகிழி பொருட்களை எரிப்பதால் ஏற்படும் காற்று மாசுபாடு ஆகியவற்றை தடுப்பதற்காகவும், ஒவ்வொரு ஊரிலும் இயக்க குழந்தைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஊர்களிலுள்ள நெகிழி பொருட்களை சேகரித்து அவற்றை ஆழமான குழிகளில் இட்டு புதைத்தனர். இது 2007 ஆம் ஆண்டு குழந்தைகள் இயக்கம் உள்ள அனைத்து ஊர்களிலும் நடத்தப்பட்டது. இது குறித்த விழிப்புணர்வு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது

**புகையிலைக்கு எதிரான விழிப்புணர்வு பரப்புரை**

அனைத்து இயக்கங்களிலும் புகையிலை குறித்த பாதிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு பரப்புரை நடைபெற்று வருகிறது.

தோழமையுடன்,
**ப.கார்த்திகேயன்,**
வயது - 17 மாதம்பட்டி,
மாவட்டத் தலைவர், திருச்சி.

# குழந்தைகள் உரிமைகள் பற்றிய விளக்கம்

**குழந்தைகளின் உரிமைகள் குறித்த வரலாறு**

1924 - நேச நாடுகளின் கூட்டமைப்பின் மூலம் குழந்தைகள் உரிமைகள் மீதான முதல் பிரகடனம் கொண்டு வரப்பட்டது.

1948 - சர்வதேச மனித உரிமை பிரகடனம் கொண்டு வரப்பபட்டது.

1959 - குழந்தைகள் உரிமைகள் மீதான இரண்டாவது பிரகடனம் கொண்டு வரப்பட்டது.

1979 - ஐக்கிய நாடுகள் சபையில் குழந்தைகள் உரிமைகள் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

1989 - நவம்பர் 20இல் ஐக்கிய நாடுகள் சபையில் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை கொண்டுவரப்பட்டது.

1992 - டிசம்பர் 11ஆம் நாள் ஐக்கிய நாடுகள் சபையில் குழந்தைகள் உரிமைகள் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு இந்தியா கையெழுத்திட்டது. இதுவரை 191 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

ஆனால் இதுவரை அமெரிக்கா, சோமாலியா ஆகிய இரண்டு நாடுகள் மட்டும் குழந்தைகள் உரிமைகள் உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை.

குழந்தைகளின் உரிமைகளை 54 விதிகள் அடங்கிய 42 உரிமைகளை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது. இந்த 42 உரிமைகளையும், சுருக்கி இங்கே நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

**1. வாழும் உரிமை,　　2. வளரும் உரிமை,**

**3. பாதுகாப்பு உரிமை,　　4. பங்கேற்பு உரிமை**

**நான்கு உரிமைகளின் விளக்கம் :**

**1. வாழும் உரிமை :**

வாழும் உரிமைகள் என்றால் உயிர் வாழும் உரிமை, குடியுரிமை, பெயர் உரிமை, அதிக பட்ச ஆரோக்கியத்தை அடைய உரிமை, ஊட்டச்சத்தான உணவு பெற உரிமை, போதுமான தரம் வாயந்த வாழ்க்கை வாழ உரிமை, நோய்க்கான சிகிச்சை மற்றும் உடல் நலம் சீரமைத்தலுக்கான வசதிகளைப் பெறுவதற்கான உரிமை ஆகியவை அடங்கும்.

**2. வளரும் உரிமை :**

வளர்ச்சிக்கான உரிமைகள் கல்வி கற்பதற்கும், குழந்தைப் பருவத்தில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் வேண்டிய உதவிகளை பெறவும், சமூக பாதுகாப்பு பெறவும், ஓய்வு நேர பொழுது போக்கிற்கும் மற்றும் கலாச்சார செயல்பாடுகளில் ஈடுபடவும் குழந்தைகளுக்கு உரிமைகள் உள்ளன.

**3.பாதுகாப்பு உரிமை :**

பாதுகாப்பு உரிமைகள், எல்லா விதமான சுரண்டல்களிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும், தீய சூழல்களிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட உள்ள உரிமைகள்.இதில் குழந்தை விற்கப்படுவதைத் தடுத்தல் கடத்தப்படுதலைத் தடுத்தல் பாரபட்சமின்றி வன்முறையிலிருந்து பாதுகாப்பு, சித்திரவதையைத் தடுத்தல் குழந்தைகளுக்கான நிதி ஆகிய உரிமைகள் அடங்கும்.

**4. பங்கேற்பு உரிமை :**

குழந்தைகளின் உரிமைகள் அவர்களின் பங்கேற்போடு நடைபெற வேண்டும். பங்கேற்பு உரிமை என்பது ஒருவகையில் மனித உரிமைகளிலேயே மிகவும் அடிப்படை உரிமையாகும். இவ்வுரிமை மற்ற உரிமைகளுக்கு புதிய வடிவம் கொடுக்கும் காரணியாக உள்ளது.

இந்த உரிமைகளை குழந்தைகள் பெறுவதற்கு இந்திய அரசு ஐ.நா ஒப்பந்தத்தின்படி பல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த கடமைப்பட்டுள்ளது.

**இரா.கல்பனா**
வயது-17, கவரபட்டி,
மாவட்டச் செயலாளர், புதுக்கோட்டை.

## நகைச்சுவை

கேள்வி :
கோழி ஏன் முட்டை போடுகிறது?
பதில் :
ஏன்னா அதுக்கு 1,2,3... தெரியாது !
செ.சரவணன், வயது-17, கவரப்பட்டி.

பள்ளிக்கு போனால் கம்படி
பேருந்துக்குள் நுழைந்தால் நெருக்கடி
வீட்டிற்குள் நுழைந்தால் கொசுக்கடி
சி.ராஜ்குமார், வயது-13, இராசாளிபட்டி.




திருச்சிராப்பள்ளி மாவட்ட
செயற்குழு பொறுப்பாளர்கள்




புதுக்கோட்டை மாவட்ட
செயற்குழு பொறுப்பாளர்கள்

**மேக்ட வேர்கள்
குழந்தைகள் இயக்க
கூட்டமைப்பின்
மாவட்ட செயற்குழு
பொறுப்பாளர்கள்**



காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்
மாவட்ட செயற்குழு பொறுப்பாளர்கள்

# மேக்ட் வேர்கள் இயக்க குழந்தைகளின் சாதனை

**வெ. சரண்யாவின் சாதனை**

பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க உறுப்பினர் வெ.சரண்யா, திரு. வெள்ளைக்கண்ணு



அவர்களுக்கும் திருமதி. சரசு அவர்களுக்கும் மகளாக பிறந்தவர். மிகவும் வறுமையான சூழ்நிலையில் தையல் தொழில் பார்த்து வரும் இவரது பெற்றோர்கள், குழந்தைகளின் கல்வியில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள். பெற்றோரின் இந்த ஊக்கத்தை பயன்படுத்திக் கொண்ட சரண்யா கடந்த 2007 -2008 கல்வியாண்டிற்கான பொதுத்தேர்வில் 452 மதிப்பெண் எடுத்து பள்ளியின் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்ற இவர் “சோதனைகளை சாதனையாக்கு” என்ற பொன்மொழியை மெய்யாக்கியுள்ளார்.

**மூ.சண்முகத்தின் சாதனை**



கடந்த 2005ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தொடர்பான பயிற்சி முகாம் இராசாளிப்பட்டி மேக்ட் மையத்தில் நடைபெற்றது. அதில் சென்னையை சேர்ந்த அருணோதயா குழந்தைகள் சங்கமும், சகோ.சிகா குழந்தைகள் சங்கமும், மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கமும் கலந்து கொண்டது. அந்த முகாமின் முடிவில் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு மரக்கன்று என முகாமில் கலந்துகொண்ட எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது. அதில் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த சண்முகம் தான் பெற்ற மரக்கன்றினை தெற்கு ஆண்டியபட்டியில் உள்ள அவரின் வீட்டிற்கு அருகில் நட்டு வளர்த்து வந்தார். அது இப்போது மரமாக வளர்ந்துள்ளது. இச்செயல்தான் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் **‘ஊருக்கு நூறுமரம் வளர்ப்போம்’** எனும் திட்டத்திற்கு அடித்தளமாக இருந்தது.

**வெ. கார்த்திகாவின் சாதனை**



குழந்தைகள் உரிமை குறித்து மாற்று அறிக்கை தயாரித்தலுக்கான மாநில அளவிலான பயிற்சி மற்றும் ஆய்வு நடைபெற்றுவருகிறது. இதில் மாநில குழுவின் பொறுப்பாளராக கார்த்திகா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மிகவும் எளிமையான குடும்பத்தில் பிறந்தவர். மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.




**துரைராஜின் சாதனை**

பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பில் தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டின் முக்கிய நிகழ்வாக குழந்தைகள் கூட்டமைப்பின் செயற்குழு தேர்தல் நடைபெற்றது. இதில் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தைச்சேர்ந்த துரைராஜ் மாநில செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். இவர் புதுக்கோட்டை மாவட்டம் பாட்னாபட்டி கிராமத்தை சேர்ந்தவர். இவருடைய பின்னணியைப் பார்த்தோமானால், இவர் மேக்ட் குழந்தைகள் இல்லத்தில் தங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற சாதனைகள் எம் இயக்கத்தில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

தோழமையுடன்,
**ம.முத்துலெட்சுமி**
வயது-13, மாதம்பட்டி.
மாவட்டச் செயலாளர், திருச்சி.

## கவிதை

*நட்பு*

நீ என்று சொன்னால் உன்னை குறிக்கும்
நான் என்று சொன்னால் என்னை குறிக்கும்
நாம் என்று சொன்னால் நம் நட்பை குறிக்கும்

ம.பாபு, வயது-17, சென்னை.

## விடுகதை

1. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?
2. பறக்காத பூப்பந்து, பகட்டான சிறுபந்து, வாயிலே போட்டால் தேன்பந்து, அது என்ன?
3. இருட்டில் கதை பேசுவான், அவன் யார்?
4. எல்லோருக்கும் கிடைக்காத மதி, எல்லோரும் விரும்பும் மதி, அது என்ன?
5. கால் இல்லாதவன் சற்று நேரத்தில் மறைவான், அவன் யார்?

1. சிரிப்பு, 2. லட்டு, 3. திரைப்படம், 4. நிம்மதி 5. பாம்பு

க. குமாரி, வயது - 14, இராசாளிபட்டி.

## முயற்சி

முயற்சி செய் உன்னால் முடியும் வரை அல்ல
உன் இலக்கை அடையும் வரை...


- ஆ. ஜெயபால், வயது-14, கவரபட்டி.

# மேக்ட் பற்றிய ஒரு பார்வை

Mary Anne Charity Trust (MACT) எனும் பெயரின் சுருக்கமாக மேக்ட் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. 1990ஆம் ஆண்டு முதல் சமூகப்பணியில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. 1996ஆம் ஆண்டு இந்திய அறக்கட்டளை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. தொடக்க காலத்தில் புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் செயல்பட்டு வந்தது.

தற்போது ஐந்து மாவட்டங்களில் அதாவது சென்னை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கல்வி, சுகாதாரம், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், புகையிலைக்கு எதிரான விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் ஆகியவற்றில் பெரும் ஈடுபாட்டுடன் செயல்படுகிறது.

தலைமை அலுவலகம் சென்னையிலும், பணித்தளங்கள் புதுக்கோட்டை மாவட்டம் இராசாளிபட்டியிலும், திருச்சி மாவட்டம் புத்தாநத்தத்திலும் இருக்கின்றது. இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.த.சிரில் அலெக்சாண்டர் அவர்கள் **'மனித மாண்பு மற்றும் நிலைத்த நீடித்த சுற்றுச் சூழலலுடன் கூடிய சமத்துவ சமூகத்தை நோக்கி'** எனும் தொலை நோக்கு இலக்குடன் படத்தில் காட்டப்படுள்ள கீழ்கண்ட பணிகளை செய்து வருகிறது.




மேக்ட் நிறுவனம் புறக்கணிக்கப்பட்ட மக்களுடை தேவையை உணர்ந்து அதன் அடிப்படையில் தனது பணிகளை விரிவாக்கிக்கொண்டே செல்கிறது. மேக்ட் சமூகப்பணி மற்றும் ஆய்வு மையத்தின் பணிகளைப் பற்றியும் அதன் செயல்பாடுகளைப் பற்றியும் அடுத்தடுத்த இதழ்களில் தெரிந்துகொள்வோம். நன்றி.

தோழமையுடன்,

**ஆ.குளோரி,** மேக்ட் திட்ட ஒருங்கிணைப்பாளர்

# குழந்தைகள் இயக்கம் கூட்டமைப்பு பற்றிய அறிமுகம்

மேக்ட் வோர்கள் குழந்தைகள் இயக்கம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராசாளிபட்டி ஊராட்சிக்குட்பட்ட காரடைக்கன்பட்டி என்னும் கிராமத்தில் 2002ஆம் ஆண்டு ஏழு குழந்தைகளைக் கொண்டு தொடங்கப்பட்டது. வாரம் தோறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் மல்லிகை, முல்லை என இரண்டு இயக்கங்களாக வளர்ந்தது.

2006ஆம் ஆண்டில் இராசாளிப்பட்டி ஊராட்சியிலுள்ள பதினோரு கிராமங்களில் குழந்தைகள் இயக்கங்கள் செயல்படத் தொடங்கியது.

இதே ஆண்டு இறுதியில் 27 கிராமங்களில் குழந்தைகள் இயக்கங்கள் செயல்பட தொடங்கியது.

2007ஆம் ஆண்டில் குழந்தைகள் இயக்க செயல்பாடுகளின் தாக்கத்தால் இதர மாவட்டங்களிலும் பரவி 29 கிராமங்களில் செயல்பட்டு வந்தது.


2007ஆம் ஆண்டில் இந்த குழந்தைகள் இயக்கங்கள் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி என இரு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு 36 கிராமங்களில் 30 குழந்தைகள் இயக்கங்கள் செயல்படுகிறது. காஞ்சிரபுரம் மாவட்டத்தில் உள்ள நல்லூரிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கூடப்பாக்கத்திலும் குழந்தைகள் இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**கூட்டமைப்பின் தேர்தல் முறை**

ஆண்டு தோறும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் ஒவ்வொரு இயக்கத்திற்கும் தலைமைத்துவப் பயிற்சி நடைெறும். இதில் வரும் ஆண்டுக்கான செயல்திட்டம் தயாரிக்கப்படும். இப்பயிற்சியின் இறுதியில் ஏழு உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பின்பு செயற்குழு ஒன்று கூடி உடனே தலைவர், செயலாளர் பொருளாளர், துணைத்தலைவர், இணைச்செயலாளர் என செயற்குழு பொறுப்பாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். மேலும் இச்செயற்குழுவிலிருந்து மாவட்ட பொதுக்குழுவிற்கும் இருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஏழு உறுப்பினர்களை கொண்ட இச்செயற்குழு மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தும். இம்முறை எல்லா இயக்கங்களுக்கும் பொருந்தும்.

அனைத்து இயக்கங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவர் (ஆண்-1, பெண்-1) மே மாதம் நடைபெறும் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி முகாமில் கலந்து கொள்வார்கள். இங்கு ஏற்கனவே தங்களுடைய இயக்கங்களில் தயாரித்துள்ள ஆண்டு செயல் திட்டத்தை ஒவ்வொரு இயக்கம் சார்பில் அறிவிக்கப்படும். இதிலிருந்து எழும் பொதுவான திட்டங்கள் மாவட்ட செயல் திட்டத்தில் இடம் பெறும்.

பொதுக்குழு பயிற்சி முகாமின் இறுதி கட்டமாக மாவட்ட வாரியாக செயற்குழு தேர்தல் நடைபெறும். அதிலிருந்து மாவட்ட செயற்குழு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்படுவார்கள். அதனை தொடர்ந்து பதவி ஏற்பு விழாவும் நடைபெறும்.



சென்ற ஆண்டு பொங்கல் விழாவின் போது ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம் என்ற திட்டத்தை குழந்தைகள் இயக்க உறுப்பினர்கள் தொடங்கி சிறப்பாக செய்து வருகின்றனர்.

**லோகேஸ்வரி** மாநில செயற்குழு உறுப்பினராக கடந்த 2006-2007ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தார். துரைராஜ் மாநில செயலாளராக 2007ஆம் ஆண்டு தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கம் பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களில் கூட்டமைப்பின் தள உறுப்பினராகவும் மற்றும் புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பின் உறுப்பினராகவும் விளங்குகிறது.

**க.துரைராஜ்**
வயது-17, பாட்னாபட்டி.
மாநில செயலாளர், பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள்
இயக்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு மற்றும் புதுவை

## மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கப் பாடல்

நாங்கள் தமிழ் குழந்தைகள் - இன்று
இயக்கமாய் ஒன்று சேர்ந்துள்ளோம் } 2

இன்னும் குழந்தைகள் அமைதி கொண்டிருந்தால்
உரிமைகள் அனைத்தையும் இழப்போம் } 2

எங்கள் உரிமைகளில் அத்துமீறல் நடந்தால்
அனைவரும் இணைந்து எதிர்ப்போம் } 2

நாங்கள் தமிழ் குழந்தைகள்...

வாழ்கின்ற உரிமை வளர்கின்ற உரிமை
பாதுகாப்பு உரிமை பங்கேற்கும் உரிமை } 2

குழந்தைகள் உரிமைகள் இத்தனை இருந்தும்
இன்னும் எங்களுக்குக் கிடைக்கவில்லை } 2

நாங்கள் கைகள் கட்டி
வாயைப் பொத்தி காலம் கடத்தவா?
உரிமைகள் அனைத்தையும்
வென்றோம் என்று வையம் போற்றவா ?
நாங்கள் தமிழ் குழந்தைகள்...